# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT CHENGALPATTU

## MCOP No. 47/2023

| Ranking of Witness | RW.1 |
|---|---|
| Name | திரு.ஈஸ்வரன் |
| Father's Name/Husband Name | திரு.தண்டாயுதபாணி |
| Age | 60 |
| Address | புதிய எண்.42, முத்தமிழ்நகர் 175 வது தெரு, கொடுங்கையூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.03.2026.

**குறுக்கு விசாரணை–**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. நான் இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சி அல்ல. விபத்தில் தொடர்புடைய சிற்றுந்து எங்கள் நிறுவனத்திற்கு சொந்தமானது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் வாகனத்தை 2ம் எதிர்மனுதாரர் ஓட்டினார் என்றால் சரிதான். வாகன உரிமையாளரான நிறுவனத்தின் மீதும், வாகன ஓட்டுநர் மீதும் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குரோம்பேட்டை போக்குவரத்து போலிசார் தயார் செய்த வரைபடத்தை நான் பார்த்தேன். அந்த வரைபடத்தில் மனுதாரரின் வாகனம் நேராக சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே வரைபடத்தில் எங்கள் நிறுவனத்தின் வாகனம் வலது பக்கமாக திரும்புவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வரைபடத்தில் சிற்றுந்து திடீரென சாலையின் வலது புறமாக திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்விதமான சமிக்ஞ்சையும் காண்பிக்காமல் திடீரென வாகனம் திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் தற்சமயம் அதனை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எங்களது வாகனத்தின் முன்பக்கத்தில் தான் சேதம் ஏற்பட்டதாக மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

30/3/26.

30/3/26

2ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், அதனால் தான் காயமடைந்த நபரை அவசர ஊர்தியில் ஏற்றி சிகிச்சைக்காக அனுப்பாமல் அங்கிருந்து வாகனத்தை நிறுத்தாமல் 2ம் எதிர்மனுதாரர் சென்றுவிட்டார் என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அங்கிருந்த பொது மக்கள் தான் காயமடைந்த மனுதாரரை அவசர ஊர்தியில் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தை மோதிவிட்டு நிறுத்தாமல் சென்றுவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்திற்கு முழுக்க முழுக்க 1ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் வாகனமும், அதன் ஓட்டுநரான 2ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை தான் காரணம் என்றும் அதனால் மனுதாரருக்கு இழப்பீடு தொகை கொடுக்க எதிர்மனுதாரர்கள் கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. எனது மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை - இல்லை.**</u>

30/3/26

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்துப்பார்த்து சரி என்று ஒப்புக் கொண்டு 30.03.2026 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

30/3/26

தலைமை குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு.